ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2241/41 - 2021 අගෝස්තු මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.08.19

*2241/41 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 9/73* (XI)

**(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 71 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அக்கட்டளைச் சட்டத்தின் 22அ என்னும் பிரிவின் கீழ் வனசீவராசிகள் பாதுகாப்பு, மின்சாரவேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் மற்றும் காடு மீள்வளர்ப்பு அத்துடன் காட்டு வள அபிவிருத்தி உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடித்தல் இராஜாங்க அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**விமலவீர திசாநாயக்க,**
வனசீவராசிகள் பாதுகாப்பு, மின்சாரவேலி மற்றும்
அகழிகளை நிர்மாணித்தல் மற்றும் காடு மீள்வளர்ப்பு
அத்துடன் காட்டு வள அபிவிருத்தி உள்ளிட்ட பாதுகாப்பு
நடவடிக்கைகளைக் கடைப்பிடித்தல் இராஜாங்க அமைச்சர்.

கொழும்பு,
*2021, ஒகத்து 19.*

1A — G 34896 - 30 (2021/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, தாவர, விலங்கின (பழக்கியெடுக்கப்பட்ட யானைகளின் பாதுகாப்பு, நல்வாழ்வு மற்றும் பதிவைக் கிரமமாக்குதல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

### பாகம் I

### பழக்கியெடுக்கப்பட்ட யானைகளின் பாதுகாப்பும் நல்வாழ்வும்

2. யானையொன்றைச் சொந்தமாக வைத்திருக்கின்ற அல்லது அதன் கட்டுக்காப்பைக் கொண்டுள்ள ஆள் ஒவ்வொருவரும் பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்கச் செயலாற்றுதல் வேண்டும்:-

(அ) மதங்கொண்டுள்ளமை அல்லது வேறேதேனும் காரணத்துக்காகப் பாகனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் அத்தகைய யானை வன்முறையாகவும் வழக்கத்துக்குமாறாகவும் நடக்கும்போது, பாரம்பரிய முறைகளுக்கிணங்கக் குறைந்தபட்ச வலோத்காரத்தைப் பயன்படுத்துகின்ற நியாயமான நடவடிக்கைகள், அத்தகைய யானைக்கு அல்லது அத்தகைய யானையினது பாகனின் அல்லது வேறெவரேனுமாளின் உயிர்களுக்கு அல்லது ஆதனத்துக்கு ஏதேனும் சேதம் விளைவிக்கப்படுவதனைத் தடுப்பதற்கென அத்தகைய யானையைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்படுதல் வேண்டும். அவசியமற்ற வேதனையை அல்லது தாங்கொணாத் துன்பநிலையை விளைவிக்கின்ற ஏதேனும் தீங்கு விளைவிக்கும் ஔடதம் அல்லது பொருள் அத்தகைய யானையைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுதலாகாது என்பதுடன் ஏதேனும் மயக்கமூட்டும் ஔடதம் ஊசி மூலம் யானைக்கு ஏற்றப்படின் அத்தகைய ஔடதம் ஒரு விலங்கு மருத்துவரின் பணிப்புகளுடன் மட்டுமே ஏற்றப்படுதலும் வேண்டும்.

(ஆ) ஊர்வலமுட்பட, கலாசாரச் செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட வட்டமான முக்காலியுடனான தங்கப் பல்லக்கு மற்றும் தெய்வத்தின் திருச்சின்னங்கள் அல்லது ஆபரணங்களைக் கொண்டுள்ள பெட்டகம் தவிர்ந்த ஏதேனும் பாரம் ஒரு யானைமீது இடப்படுமிடத்து, யானையின்மீது தோதான கலணைவார் ஒன்று இடப்பட்டாலொழிய அத்தகைய பாரம் அத்தகைய யானையின்மீது இடப்படுதலாகாது. அத்தகைய யானை சுற்றுலாப் பயணத்துறையில் அல்லது அத்தகைய வேறு செயற்பாட்டில் பயன்படுத்தப்படும்போது, அத்தகைய யானையின்மீது நான்குக்கு மேற்பட்ட ஆட்கள் செல்வது அனுமதிக்கப்படுதலாகாது.

(இ) யானையொன்று ஏதேனும் வேலையில் ஈடுபடுவதற்குத் தகுதியற்றதென ஒரு விலங்கு மருத்துவர் அல்லது யானைகளுக்குச் சிகிச்சையளிக்கும் ஒரு பதிவு செய்யப்பட்ட பாரம்பரிய மருத்துவர் தீர்மானிக்கும்போது, அத்தகைய யானை ஏதேனும் வேலையில், சேவையில் அல்லது வேறு கடமையில் பயன்படுத்தப்படுதலாகாது.

(ஈ) (i) ஒரு யானையை இடம்பெயர்ப்பதற்கு ஏதேனும் வாகனம் பயன்படுத்தப்படுமிடத்து அத்தகைய வாகனம் அத்தகைய யானையின் எடைக்குச் சமமான எடையைத் தாங்குவதற்கான கொள்ளளவையுடையதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் தேவைப்பட்ட அனுமதிப்பத்திரங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும். அத்தகைய யானையை அத்தகைய வாகனத்தினுள் ஏற்றுவதற்கும் அவ்வாகனத்திலிருந்து இறக்குவதற்கும் பொதுமக்களுக்கு அல்லது ஏதேனும் ஆதனத்துக்கு ஏதேனும் சேதத்தைத் தடுப்பதற்குமெனப் பலமான பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்து ஆக்கப்பட்ட இயங்குதளமொன்றுடனும் குறைந்தபட்சம் ஆறு சில்லுகளுடனும் பலமான மறைப்பை அத்தகைய வாகனம் கொண்டிருத்தல் வேண்டும். இரண்டு யானைகள் இடம்பெயர்க்கப்படுமிடத்து அத்தகைய வாகனம் பத்துச் சில்லுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ii) எவையேனும் சூழ்நிலைகளில், யானையொன்று தொடர்ச்சியாகப் பன்னிரெண்டு மணித்தியாலங்களுக்கு மேற்பட இடம்பெயர்க்கப்படுதலாகாது. ஏதேனும் யானை இடம்பெயர்க்கப்படும்போது, யானையொன்று இடம்பெயர்க்கப்படுகின்றதெனச் சுட்டிக்காட்டுகின்ற அறிவித்தற் பலகையொன்று அத்தகைய வாகனத்தில் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வாகனத்தின் வேகம் ஒரு மணித்தியாலத்துக்கு முப்பது (30 கி/மீற்றர்களை) விஞ்சுதலுமாகாது.

(உ) யானையொன்று மதங்கொண்ட நிலையில் அல்லது குழம்பிய நிலையில் இருக்கும்போதும், பொதுமக்களின் உயிர்களும் ஆதனமும் பாதுகாக்கப்படுவதற்கென ஊர்வலத்தின்போது அது கட்டி வைக்கப்படுவது தேவைப்படும்போதும் அல்லது கட்டுப்படுத்தப்படுவதற்குப் பாதுகாப்பான முடிச்சுக்களைப் பயன்படுத்தி அதனைப் பயன்படுத்துவது தேவைப்படும்போதும், ஏதேனும் தாங்கொணத் துன்பநிலையை விளைவிக்காத வகையில் அத்தகைய யானையின் பலம், உயரம் மற்றும் எடைக்கு ஒத்ததாகவுள்ள பொருத்தமான சங்கிலிகளைப் பயன்படுத்தி அத்தகைய யானை கட்டப்பட்டுப் பாரம்பரியமுறைகளுக்கிணங்க ஊர்வலத்தில் கொண்டு செல்லப்படுதல் வேண்டும். அத்தகைய சங்கிலி ஆகக்குறைந்தது மூன்று நாட்களுக்கு ஒரு தடவையேனும் யானையின் ஒரு பக்க உறுப்பிலிருந்து இன்னொரு பக்க உறுப்புக்கு மாற்றப்படுதல் வேண்டும்.

(ஊ) பாரம்பரிய முறைகளுக்கிணங்கத் தயாரிக்கப்பட்ட சங்கிலிகளைப் பயன்படுத்திக் கட்டப்பட்ட முடிச்சுக்கள் ஒரு யானையைக் கட்டும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் குழம்பிய நிலையில் பாகனின் கட்டுப்பாட்டிலிருந்து தப்பிச்சென்று கட்டாக்காலியாகத் திரியும் ஏதேனும் யானை, கட்டியிழுக்கும் கயிற்றின்மூலம் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நோக்கத்துக்காக எவையேனும் நைலோன் கயிறுகளோ, கூர்முனைகளுடனான அல்லது கூரிய அருகுகளுடனான இரும்புச் சங்கிலிகளோ பயன்படுத்தப்படுதலுமாகாது.

(எ) (i) யானை எதுவும், அத்தகைய யானைக்கு அல்லது வேறேதேனும் யானைக்கு அவசியமான எவையேனும் உணவுப்பொருட்களை எடுத்துச் செல்லுதல் அல்லது அத்தகைய யானையின் சங்கிலிகளையும் மணிகளையும் அதன் கழுத்தின்மீது கொண்டு செல்லுதல் தவிர ஏதேனும் ஓய்வின்றி ஒரு நாளைக்கு நான்கு மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்கு ஏதேனும் வாகனத்தை இழுத்துச்செல்வதற்குப் பயன்படுத்தப்படுதலாகாது.

(ii) தந்தங்களின் அல்லது தாடைகளின் நேரடிப் பயன்பாட்டுடன், முகவாய்க்கட்டையை அல்லது சேணத்தைப் பயன்படுத்திப் பாரம்பரிய முறைமையிலுக்கிணங்க உணவை, அல்லது அத்தகைய யானையின் தந்தங்களையும் தாடைகளையும் பயன்படுத்தி ஏதேனும் பாரத்தை உயர்த்துவதற்கு அல்லது இழுத்துச் செல்வதற்கு அவசியமான வெட்டுமரத்தைக் கொண்டு செல்லுதல் தவிர வெட்டுமரம் அல்லது வேறேதேனும் பாரம் இடம்பெயர்க்கப்படுதலாகாது.

(iii) இம்முறையில் அத்தகைய யானையினால் ஏற்றிச் செல்லப்படும் பாரம் அத்தகைய யானையினது எடையின் மூன்றிலொன்றுக்கு (1/3) குறைவாகவிருத்தல் வேண்டும்.

(ஏ) மிக்க சாதகமற்ற வெப்பமான வானிலை நிலைமைகளில் யானையொன்று வேலையில் ஈடுபடுத்தப்படுதலாகாது அல்லது ஈடுபடச் செய்விக்கப்படுதலாகாது அல்லது தங்குவதற்குச் செய்விக்கப்படுதலாகாது என்பதுடன் மிக்க வெப்பமான வானிலை நிலைமைகளின்போது ஊர்வலத்துக்காக அல்லது குளிப்பதற்காகக் கொண்டு செல்லுதல் தவிர, கால்நடை மூலம் தார் வீதிகளில் நீண்ட காலப்பகுதிகளுக்காகக் கொண்டு செல்லப்படுதலுமாகாது. ஊர்வலம்தவிர ஏதேனும் யானை இரவின்போது ஏதேனும் வேலையில் அல்லது வேறு செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படுதலாகாது.

(ஐ) (i) ஏதேனும் யானைக்குச் சுத்தமானதும் சுகாதாரத்துக்கொத்ததுமான சூழலில் போதிய நிழலுடனும் காற்றோட்டத்துடனும் லாயமொன்று அல்லது வேறேதேனும் பாரம்பரிய இயற்கையான கட்டிவைக்கும் இடமொன்று ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

(ii) அத்தகைய லாயத்தின் உயரம் அத்தகைய யானையின் உயரத்துக்குப் பொருத்தமாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் லாயத்தினுள்ளான வெப்பத்தை மிகக்குறைந்ததாக்குவதற்கென அத்தகைய லாயத்தின் கூரையை மூடுவதற்குச் சாக்குகள், வைக்கோல், கிடுகுகள் அல்லது அத்தகைய வேறு பொருள் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்.

(iii) கூரையை மூடுவதற்கு இரும்புத் தட்டங்கள் அல்லது கன்னார்த் தட்டங்கள் பயன்படுத்தப்படின், லாயத்தினுள் வெப்பத்தை மிகக்குறைந்ததாக்குவற்கான போதிய முறைமையியல் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும்.

(iv) யானையை இயற்கையான சூழலில் கட்டிவைக்குமிடத்து, அது ஒரு பெரிய, பலமான, இறுக்கமாக்கப்பட்ட மரத்தின் நிழலின்கீழ் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய இடமானது, அத்தகைய யானையின் பிற்புறப்பக்க உறுப்புக்களைச் சௌகரியமாக வைப்பதற்குக் கொங்குறீற்றினாலான அல்லது ஓர் இயற்கையான கல்தட்டமொன்றைப் பொருத்துவதன்மூலம் ஆக்கப்படுதலும் வேண்டும்.

(v) யானை வைத்திருக்கப்படும் லாயம் கால்நடைகள் மற்றும் வேறு வீட்டுவிலங்குகளினின்றும் தனிவேறாக்கப்படுதல் வேண்டும்.

(vi) யானை வைத்திருக்கப்படும் இடம் இடிமின்னலுக்கு வெளிக்காட்டப்பட்டதாகவிருப்பின், அத்தகைய இடத்துக்கு இடிதாங்கியொன்று முறையாகப் பொருத்தப்படுதல் வேண்டும். மேலதிகமாக, பொருத்தமான வடிகாலமைப்பு முறைமையையும் கழிவு அகற்றுகை முறைமையையும் வழங்குவதன்மூலம் லாயத்தை அல்லது யானையைக் கட்டி வைக்கும் வேறு இடத்தை நல்ல சுகாதார நிலைமையில் வைத்திருப்பதற்குத் தோதான வழிமுறைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஒ) சினிமாப்படப்பிடிப்புகள் அல்லது வேறெவையேனும் ஒத்த செயற்பாடுகளில் அத்தகைய யானையைப் பயன்படுத்தும்போது அரச ஆதரவின்மீது அல்லது அரச அங்கீகாரத்தின்கீழான ஊர்வலங்கள் அல்லது சுற்றுலாப்பயணத்துறைச் செயற்பாடுகள், தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்புகள் மற்றும் பதிவுகளுட்பட, கலாசாரச் செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட தீயணைப்புப் பயிற்சிகள், வெளிச்சங்கள், வெளிச்ச அலங்கரிப்புகள் என்பன தவிர,

அத்தகைய யானைக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய ஒரு முறையில் அதிக வெப்பம், மின்சாரம், மின்சாரக் குமிழ்கள் அல்லது மயக்கமூட்டும் ஔடதங்கள் பயன்படுத்தப்படுதலாகாது. அவ்வாறு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படுமிடத்து, அது ஒரு விலங்கு மருத்துவரின் அல்லது யானைகளுக்குச் சிகிச்சையளிக்கும் ஒரு பதிவு செய்யப்பட்ட பாரம்பரிய மருத்துவரின் வழிகாட்டு நெறிகளுக்கிணங்க நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(ஓ) பாரம்பரிய ஊர்வலங்களில் அத்தியாவசியமாகவுள்ள பாரம்பரிய துப்பாக்கிச்சூடு தவிர ஆளெவரும் ஏதேனும் யானைக்கருகில் வெடிகொளுத்துதலாகாது அல்லது துப்பாக்கியினால் சுடுதலாகாது.

(ஔ) விழாக்களுக்காக யானைகள் அலங்கரிக்கப்படுவது தேவையாகவுள்ளபோது மின்பிறப்பாக்கிகள் அல்லது வேறெவையேனும் ஆபத்தான மின்சார வழங்கல் பயன்படுத்தப்படுதலாகாது என்பதுடன் அத்தகைய யானைக்கு ஏதேனும் தீங்கு விளைவிக்கப்படுவதனைத் தடுப்பதற்கெனக் குறைந்தபட்ச மின்வலுவுடனான மின்கலங்கள் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்.

(க) ஒவ்வொரு யானைக்கும் போதிய அளவுகளிலான புதிதான, போஷாக்குள்ள உணவும் நீரும் நாளாந்தம் வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன் தாகம் அல்லது பட்டினிமூலம் அத்தகைய யானை வேதனைக்குட்படுத்தப்படும் சூழ்நிலைகளின்கீழ் அது கைவிடப்படுதலுமாகாது.

(ங) நோய்வாய்ப்பட்டவொரு யானை அல்லது மதங்கொண்டுள்ளவொரு யானை தவிர்ந்த ஏதேனும் யானையானது, அதனை இடம்பெயர்க்கும்போது அல்லது அது ஊர்வலத்தில் செல்லும் நாட்களில் தவிர, நாளாந்தம் இரண்டரை (2 1/2) மணித்தியாலங்களுக்குக் குறையாமல் குளிப்பாட்டப்படுதல் வேண்டும்.

(ச) ஆபத்தான நீர்வழிகள் அல்லது ஆறுகளைக் கடந்து நீந்திச் செல்வதற்கு ஏதேனும் யானை அனுமதிக்கப்படுதலாகாது அல்லது அனுமதிக்கப்படுவதனைச் செய்வித்தலாகாது.

(ஞ) யானை ஒவ்வொன்றும், அத்தகைய யானை போஷாக்குக் குறைபாடொன்றினால் அல்லது வேறேதேனும் உடற்றகுதியீனத்தினால் பீடிக்கப்பட்டுள்ளதாவென்பதை நிச்சயிப்பதற்கு ஒரு விலங்கு மருத்துவரினால் அல்லது யானைகளுக்குச் சிகிச்சையளிக்கும் ஒரு பதிவு செய்யப்பட்ட பாரம்பரிய மருத்துவரினால் பரிசோதனை செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய மருத்துவரினால் அல்லது பாரம்பரிய மருத்துவரினால் மருந்துப்பட்டோலையில் அளிக்கப்படக்கூடிய அத்தகைய மருந்துகளும் உணவும் அதற்குக் கொடுக்கப்படுதலும் வேண்டும். அத்தகைய சிகிச்சையானது, சிகிச்சை வரலாற்றுத்தாளில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பழக்கியெடுக்கப்பட்ட யானை தொடர்பிலான அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படும்போது விதித்துரைக்கப்பட்ட அலுவலரினால் புறக்குறிப்பிடப்படச் செய்விக்கப்படுதலும் வேண்டும்.

(ட) யானையொன்று ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை ஒரு விலங்கு மருத்துவரினால் அல்லது யானைகளுக்குச் சிகிச்சையளிக்கும் ஒரு பதிவு செய்யப்பட்ட பாரம்பரிய மருத்துவரினால் முழுமையான பரிசோதனைக்குட்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நிகழ்வு சிகிச்சை வரலாற்றுத்தாளில் பதியப்படுதலும் வேண்டும்.

(ண) ஒவ்வொரு யானைக்கும் தூக்கத்துக்காகப் போதிய நேரம் அனுமதிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஐந்து வயதுக்குக் குறைந்த யானையொன்றின் விடயத்தில், அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்குத் தூங்குவதற்கு அதற்கு அனுமதியளிக்கப்படுதலும் வேண்டும்.

(த) பாரம்பரிய கருவிகளென ஏற்றங்கீகரிக்கப்பட்ட முனை, பிரம்பு அல்லது கத்தியுடனான நியம அங்குசம், ஒரு யானைக்குப் பயிற்சியளிப்பதற்கு, அதனைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது பராமரிப்பதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய நோக்கத்துக்காகக் கூரிய ஆயுதங்கள் எவையும், தீ அல்லது ஏதேனும் மயக்கமூட்டும் ஔடதம் பயன்படுத்தப்படுதலாகாது. அத்தகைய கருவிகளின் நியமங்களும் அளவுக்குறிப்பீடுகளும் அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(ந) பின்வரும் யானைகள் ஏதேனும் வேலையில் அல்லது வேறு செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படுதலாகாது:-

(i) கருத்தரித்துள்ள பெண் யானையொன்று;
(ii) இரண்டு வயதுக்குக் குறைந்த யானைக் கன்றொன்றையுடைய ஏதேனும் பெண் யானை;
(iii) மதங்கொண்டுள்ள ஏதேனும் யானை;
(iv) அறுபது வயதுக்கு மேற்பட்ட ஏதேனும் யானை ;

ஆயின், அறுபது வயதுக்கு மேற்பட்டவொரு யானை, ஏதேனும் பாரம்பரிய கலாசார ஊர்வலத்தில் பயன்படுத்தப்படுவதற்கு அத்தகைய யானை பொருத்தமான நிலையில் உள்ளதென விலங்கு மருத்துவரொருவர் அல்லது யானைகளுக்குச் சிகிச்சையளிக்கும் ஒரு பதிவு செய்யப்பட்ட பாரம்பரிய மருத்துவர் விதந்துரைத்திருந்தால் ஏதேனும் பாரம்பரிய கலாசார ஊர்வலத்தில் பயன்படுத்தப்படலாம்; அல்லது

(v) ஏதேனும் நோய்வாய்ப்பட்ட யானை.

(ப) உபஒழுங்குவிதி (ந) இல் குறித்துரைக்கப்பட்ட யானையொன்று தவிர்ந்த ஏதேனும் யானை குறைந்தபட்சம் 5 கி.மீ. தூரத்துக்கு நாளாந்தம் நடப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(ம) ஐந்து வயதுக்குக் குறைந்த ஏதேனும் யானைக் கன்று, தாய் யானை ஏதேனும் வேலையில் ஈடுபட்டிருக்கும்போது தாயுடன் இருப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் வேலையில் ஈடுபடுத்தப்படுதலுமாகாது. அத்தகைய யானைக் கன்று தாய் யானையிலிருந்து பிரிக்கப்படுதலுமாகாது.

(ய) ஒரு யானையின் கட்டுக்காப்பைக் கொண்டுள்ள அல்லது அதனைப் பராமரிக்கின்ற எவரேனுமாள் அத்தகைய யானையைப் பராமரிப்பதற்கும் அத்தகைய யானை ஓய்வாகத் தங்குவதனை அனுமதிப்பதற்கும் மற்றும் மதங்கொண்டுள்ளபோது பொதுமக்களின் உயிர்களுக்கு அல்லது ஏதேனும் ஆதனத்துக்கு ஏதேனும் சேதம் விளைவிக்காதிருக்கும்வகையில் அத்தகைய யானையைக் கட்டி வைப்பதற்குமெனப் பரப்பளவில் மூன்று ஏக்கர்களுக்கு மேற்பட்ட காணியொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட யானைகளின் விடயத்தில், அத்தகைய ஒவ்வொரு யானைக்கும், ஒவ்வொன்றுக்கும் ஒரு ஏக்கர் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(ர) சிறந்த உடனலமுள்ள, பொருத்தமான யானைகள் இனப்பெருக்க நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் பின்வரும் உறுப்பினர்களைக்கொண்ட குழுவொன்று அதற்கான தோதான நடவடிக்கையொன்றைத் தயாரித்தலும் வேண்டும்; இது பணிப்பாளர் தலைமையதிபதியினால் நடைமுறைப்படுத்தப்பட்டு காலத்துக்குக்காலம் அவரினால் மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும்:-

(i) பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அலுவலரொருவர்;

(ii) தேசிய விலங்கினப் பூங்காத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி;

(iii) விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட விலங்கு மருத்துவரொருவர்;

(iv) சுதேச மருத்துவம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரும் யானைகளுக்குச் சிகிச்சையளிப்பவருமான பதிவு செய்யப்பட்ட பாரம்பரிய மருத்துவரொருவர்; அத்துடன்

(v) பழக்கியெடுக்கப்பட்ட யானைகளின் சொந்தக்காரர்களினது ஒழுங்கமைப்பின் தவிசாளர், செயலாளர் அல்லது பொருளாளர்;

(ல) அத்தகைய யானையைப் பராமரிப்பதற்குப் பயிற்சிபெற்றவரும் அனுபவம்வாய்ந்தவருமான பாகன் ஒருவர் ஈடுபடுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் ஒரு யானையைச் சொந்தமாக வைத்திருக்கின்ற அல்லது அதன் கட்டுக்காப்பைக் கொண்டுள்ள அத்தகைய ஆள், பாகனானவர் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கையில் ஏதேனும் மதுபானத்தை அல்லது ஏதேனும் தீங்குவிளைவிக்கும் ஔடதத்தை உட்கொள்ளாதிருப்பதனை உறுதிப்படுத்துதலும் வேண்டும். அத்தகைய எவரேனும் பாகன், தேசிய விலங்கினப் பூங்காத் திணைக்களத்தினதும் பழக்கியெடுக்கப்பட்ட யானைகளின் சொந்தக்காரர்களினது ஒழுங்கமைப்பினதும் உடனுழைப்புடன் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தைப் பின்பற்றுதல் வேண்டும். அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்தைப் பின்பற்றியமைக்கான எண்பிப்பாக அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட சான்றிதழை வனசீவராசிகள் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிப்பதன்மேல் வனசீவராசிகள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்டவோர் அனுமதிப்பத்திரத்தையும் ஆளடையாள அட்டையையும் தனதுடைமையில் கொண்டிராமல் அத்தகைய ஆள் சேவையில் ஈடுபடுதலாகாது.

(வ) யானையொன்றின் உடனலத்துக்கான ஏதேனும் அச்சுறுத்தலை அல்லது சேதத்தைத் தடுப்பதற்கென அத்தகைய யானையின் ஒரு தந்தத்தை அல்லது கோறைப் பல்லை அறுப்பது அவசியமாகவுள்ளவிடத்து, அது, ஒரு விலங்கு மருத்துவரின் அல்லது யானைகளுக்குச் சிகிச்சையளிக்கும் ஒரு பதிவு செய்யப்பட்ட பாரம்பரிய மருத்துவரின் மேற்பார்வையின் கீழ் செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய தந்தத்தை அல்லது கோறைப்பல்லை அறுத்த பின்னர் ஒரு மாதத்தினுள் அதுபற்றிப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அது தரவுத்தாளில் முறையாகப் பதியப்படுதலும் வேண்டும். அத்துடன் பழக்கியெடுக்கப்பட்ட யானைகள் தொடர்பிலான அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படும்போது அத்தகைய பதிவேடு வனசீவராசிகள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் புறக்குறிப்பிடப்படுவதனைச் செய்வித்தலும் வேண்டும்.

## பாகம் II

### பழக்கியெடுக்கப்பட்ட யானைகளின் பதிவைக் கிரமமாக்குதல்

3. பழக்கியெடுக்கப்பட்ட யானையொன்றைப் பதிவு செய்து உரிமமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு உட்கருதுகின்ற ஆள் ஒவ்வொருவரும், இவ்வொழுங்குவிதிகளின் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கமைய விதித்துரைக்கப்பட்ட அலுவலரிடமிருந்து உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

4. கட்டளைச் சட்டத்தின் 22அ என்னும் பிரிவின் நோக்கத்துக்காக, பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய யானையின் பதிவுக்கும் அது தொடர்பிலான உரிமத்துக்குமான விண்ணப்பம் எந்த விதித்துரைக்கப்பட்ட அலுவலருக்குச் செய்யப்படவேண்டுமோ மற்றும் அத்தகைய யானையைப் பதிவு செய்து அது தொடர்பிலான உரிமமொன்றை வழங்குவதற்கான தத்துவத்தை எவர் கொண்டிருக்க வேண்டுமோ (இதனகத்துப்பின்னர் "விதித்துரைக்கப்பட்ட அலுவலர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அந்த விதித்துரைக்கப்பட்ட அலுவலராகவிருத்தல் வேண்டும்.

5. (1) முதற்றடவையாக யானையொன்றைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, பொருளளவில் அதன்கண் தரப்பட்டுள்ள படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஒரு சொந்தக்காரரின் கட்டுக்காப்பில் உள்ள ஆனால் இவ்வொழுங்குவிதிகள் தொடங்கும் திகதியன்றுள்ளவாறு பதிவு செய்யப்பட்டிராத யானையொன்றின் பதிவுக்கான விண்ணப்பம் இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, பொருளளவில் அதன்கண் தரப்பட்டுள்ள படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

6. (1) ஐந்தாம் ஒழுங்குவிதியின்கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும் பின்வருவனவற்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்:-

(அ) உரிமைக் கட்டணமாக, வனசீவராசிகள் பேணிக்காத்தல் நிதியத்துக்குப் பத்தாயிரம் ரூபா (ரூபா 10,000.00) கொடுப்பனவுக்கான பற்றுச்சீட்டு;

(ஆ) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட யானையின் மரபணு பரீட்சிப்புப் பற்றிய அறிக்கை;

(இ) யானைக்கு நுண்சில்லுகள் பொருத்தப்பட்டுள்ளனவென விலங்கு மருத்துவரொருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழொன்று; அத்துடன்

(ஈ) விதித்துரைக்கப்பட்ட அலுவலரினால் வழங்கப்பட வேண்டுமெனக் கோரப்பட்ட ஏனைய தகவல்கள்.

(2) இவ்வொழுங்குவிதிகள் தொடங்கும் திகதியன்றுள்ளவாறாக ஓர் உரிமத்தின், சன்னசவின் அல்லது வேறு சட்டப்படியான ஆவணத்தின்மூலம் அல்லது அடுத்துறுகையின்மூலம் ஒரு யானையின் சொத்தாண்மையைக் கொண்டிருக்கின்ற எவரேனுமாள் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அத்தகைய யானையைப் பதிவு செய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பதிவானது இவ்வொழுங்குவிதிகள் தொடங்கும் திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் பெற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

(3) (அ) ஐந்தாம் ஒழுங்குவிதியின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும், 8 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் நியமிக்கப்பட்ட பரிசோதனைக் குழுவுக்கு விதித்துரைக்கப்பட்ட அலுவலரினால் ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) குழுவானது அத்தகைய தகவுடைமையைப் பரிசோதனை செய்வதற்கான கட்டளைக்கற்களைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன் செயலாளருக்கு அவரது அங்கீகாரத்துக்காக அவை பின்னர் ஆற்றுப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(இ) செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டளைக்கற்களுக்கிணங்க இயைபான விண்ணப்பகாரரின் தகவுடைமையைப் பரிசோதனை செய்த பின்னர் அத்தகைய குழுவானது, அவ்விண்ணப்பம் பெறப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வாரக் காலப்பகுதியினுள் (இதனகத்துப் பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வனசீவராசிகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) அத்தகைய விண்ணப்பமும் அது தொடர்பிலான அறிக்கையும் அத்தகைய அறிக்கை பெறப்பட்டதிலிருந்து இரண்டு வாரக் காலப்பகுதியினுள் 8 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் நியமிக்கப்பட்ட விதப்புரைக் குழுவுக்குச் செயலாளரினால் ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(உ) விண்ணப்பத்தை, பந்தி (ஈ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் சேர்த்து கவனத்துட்கொண்டபின்னர் விதப்புரைக் குழுவானது அத்தகைய அறிக்கை பெறப்பட்டதிலிருந்து இரண்டுவாரக் காலப்பகுதியினுள் ஓர் அமைச்சரவை நிருபத்தின்மூலம் அதன் விதப்புரைகளை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) விதப்புரைக் குழுவினாற் சமர்ப்பிக்கப்பட்ட விதப்புரைகளைக் கவனத்துட்கொண்ட பின்னர் அமைச்சரவை உரிமமொன்றை வழங்குவதற்கான அங்கீகாரத்தை வழங்கலாம்.

7. (1) தகவுடைமைக் கட்டளைக்கற்களை நிறைவேற்றியுள்ள எவரேனுமாளை விதித்துரைக்கப்பட்ட அலுவலர் பதிவு செய்தல் வேண்டுமென்பதுடன் இதற்கான அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, பொருளளவில் அதன்கண் தரப்பட்டுள்ள படிவத்தில் உரிமமொன்றை வழங்குதலும் வேண்டும்.

(2) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களமும் தேசிய விலங்கினப் பூங்காத் திணைக்களமும், யானையானது விண்ணப்பகாரருக்குக் கையளிக்கப்பட்டதிலிருந்து மூன்று மாதக் காலப்பகுதி முடிவுறுமுன்னர் விண்ணப்பகாரருக்கு உபஒழுங்குவிதி (1) இன்கீழ் வழங்கப்பட்ட உரிமத்துடன் சேர்த்து நவீன தொழில்நுட்பவியலைப் பயன்படுத்தி எல்லாத் தரவுகளும் உட்படத் தயாரிக்கப்பட்ட அட்டையொன்றைக் கூட்டாக வழங்குதல் வேண்டும்.

(3) உரிமமொன்றுக்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படுமிடத்து விதித்துரைக்கப்பட்ட அலுவலர், அத்தகைய முடிபிலிருந்து பதினான்கு நாட்களினுள் அத்தகைய நிராகரிப்புக்கான காரணங்களை எழுத்தில் விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

8. (1) பரிசோதனைக் குழு பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) வனசீவராசிகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரும் குழுவின் தவிசாளராக இருக்க வேண்டியவருமான அவ்வமைச்சின் மேலதிகச் செயலாளர் ஒருவர்;

(ஆ) விண்ணப்பதாரர் எம்மாவட்டத்தினுள் வதிகின்றாரோ அம்மாவட்டத்தின் அரசாங்க அதிபர்;

(இ) உள்நாட்டலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அவ்வமைச்சின் மேலதிகச் செயலாளர் ஒருவர்;

(ஈ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் அல்லது விலங்கு மருத்துவர் ஒருவர்;

(உ) தேசிய விலங்கினப் பூங்காத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய தேசிய விலங்கினப் பூங்காத் திணைக்களத்தின் விலங்கு மருத்துவர் ஒருவர்;

(ஊ) பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஒருவர்; அத்துடன்

(எ) பழக்கியெடுக்கப்பட்ட யானைகளின் சொந்தக்காரர்களினது ஒழுங்கமைப்பின் தவிசாளர், செயலாளர் அல்லது பொருளாளர்.

(2) விதப்புரைக் குழுவானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) செயலாளர்;

(ஆ) பொது நிருவாகம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(இ) பணிப்பாளர் தலைமையதிபதி;

(ஈ) பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதி; அத்துடன்

(உ) தேசிய விலங்கினப் பூங்காத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி.

9. வனசீவராசிகள் பணிப்பாளர் தலைமையதிபதி, பழக்கியெடுக்கப்பட்ட யானைகள் பற்றிய இடாப்பை நாளதுவரையாக்குதலும் பேணுதலும் அல்லது அது நாளதுவரையாக்கப்பட்டுப் பேணப்படுவதனைச் செய்வித்தலும் வேண்டும்.

10. (1) ஒரு யானையின் சொந்தக்காரருக்கெதிராகச் செய்யப்பட்ட ஒவ்வொரு முறைப்பாடும் 8 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் நியமிக்கப்பட்ட பரிசோதனைக் குழுவினால் ஏற்றுக் கவனிக்கப்படுதல் வேண்டும்.

(2) பரிசோதனைக் குழு, அம்முறைப்பாடு பெறப்பட்டதிலிருந்து இரண்டு வாரங்களினுள் அம்முறைப்பாடு பற்றிய அதன் பரிசோதனையைப் பூர்த்தி செய்தல் வேண்டுமென்பதுடன் அம்முறைப்பாட்டை அதன் அவதானிப்புகளுடன் சேர்த்து 8 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் நியமிக்கப்பட்ட விதப்புரைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துதலும் வேண்டும்.

(3) யானையின் சொந்தக்காரர் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றியுள்ளாரென விதப்புரைக்குழுவின் திருப்திக்குக் காட்டப்படுமிடத்து, அத்தகைய குழு அத்தகைய சொந்தக்காரரிடமிருந்து யானையை அகற்றுவதற்கான விதப்புரைகளைச் செய்தல் வேண்டும்.

(4) அத்தகைய யானை ஒரு புதிய சொந்தக்காரருக்குக் கையளிக்கப்படும்வரை, அத்தகைய யானை செயலாளரினால் தேசிய விலங்கினப் பூங்காத் திணைக்களத்தின் கட்டுக்காப்புக்குக் கையளிக்கப்படுதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், முன்னைய சொந்தக்காரர் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளாரென விதப்புரைக் குழுவின் திருப்திக்குக் காட்டப்படின், யானையின் கட்டுக்காப்பு அவருக்குக் கையளிக்கப்படலாம்.

(5) நான்காம் உபஒழுங்குவிதியின்கீழ் தேசிய விலங்கினப் பூங்காத் திணைக்களத்துக்குக் கையளிக்கப்பட்ட யானையொன்றைப் பேணுவதற்கு உறப்பட்ட ஒவ்வொரு செலவும், வனசீவராசிகள் பேணிக்காத்தல் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

11. (1) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று பராதீனப்படுத்தப்படத்தக்கதல்ல. அத்தகைய உரிமம் தவறவிடப்படின் அல்லது களவாடப்படின், சொந்தக்காரர் உடனடியாக அத்தகைய நிகழ்வை விதித்துரைக்கப்பட்ட அலுவலருக்கு, பிரிவின் பிரதேச செயலாளருக்கு அல்லது எந்த இயைபான இடப்பரப்பினுள் யானை வழமையாக வைத்திருக்கப்படுகின்றதோ அந்த இயைபான இடப்பரப்பின் பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) ஒவ்வோர் உரிமமும் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதியொன்றுக்கு அத்தகைய உரிமம் செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

(3) எந்த யானை தொடர்பில் உரிமம் வழங்கப்பட்டுள்ளதோ அந்த யானை விற்பனை செய்யப்பட்டிருந்தால், இறந்திருந்தால் அல்லது வேறேதேனும் முறையில் கையுதிர்க்கப்பட்டிருந்தால் ஒழிய, ஓர் உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்று அத்தகைய உரிமம் முடிவுறும் திகதிக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் செய்யப்படுதல் வேண்டும்.

(4) (அ) ஒரு யானை தொடர்பில் வருடாந்த உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம், இதற்கான அட்டவணை V இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, பொருளளவில் அதன்கண் தரப்பட்டுள்ள படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும். ஓர் உரிமத்துக்கான புதுப்பித்தற் கட்டணம் ஐயாயிரம் (ரூபா 5,000.00) ரூபாவாதல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் உரிமம் உரிய திகதியன்று புதுப்பிக்கப்படாதிருக்குமிடத்து, அத்தகைய உரிமம் புதுப்பிக்கப்படாத ஒவ்வொரு மாதத்திற்கும் ஐந்நூறு (500.00) ரூபாவான மேலதிக விதிப்பனவு புதுப்பித்தற் கட்டணத்துடன் சேர்த்துச் செலுத்தப்படுதல் வேண்டும். புதுப்பிப்பதற்குரிய திகதியிலிருந்து ஓராண்டினுள் உரிமம் புதுப்பிக்கப்படாதவிடத்து அத்தகைய உரிமம் இல்லாதாக்கப்படுதல் வேண்டும்.

(இ) இவ்வொழுங்குவிதியின்கீழ் இல்லாதாக்கப்படுகின்ற உரிமமொன்றை வைத்திருக்கும் எவரேனுமாள் ஒரு புதிய உரிமத்துக்காக விண்ணப்பிப்பதற்கு விரும்புமிடத்து, அது 5 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் செய்யப்படுதல் வேண்டும்.

(5) உரிமமானது எந்த நிபந்தனைக்கமைய வழங்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் நிபந்தனை மீறப்படின், பணிப்பாளர் தலைமையதிபதி ஓர் உரிமத்தை இடை நிறுத்தலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

12. பழக்கியெடுக்கப்பட்ட யானையொன்று இறந்திருந்தால் அல்லது காணாமற்போயிருந்தால் அல்லது சொந்தக்காரரின் கட்டுக்காப்பிலிருந்து தப்பிச்சென்றிருந்தால், அந்த யானையைச் சொந்தமாக வைத்திருக்கின்ற அல்லது உடைமைகொண்டுள்ள ஆள் அதனை உடனடியாக விதித்துரைக்கப்பட்ட அலுவலருக்கு அல்லது இயைபான இடப்பரப்பிலுள்ள பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும். காணாமற்போன அல்லது தப்பிச்சென்ற யானை கண்டுபிடிக்கப்படின் அல்லது கைப்பற்றப்படின், அந்த யானையைக் கண்டுபிடித்த அல்லது கைப்பற்றிய ஆள் அதனை மிகக்கிட்டிய பிரதேச செயலாளர் அலுவலகத்துக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பிரதேச செயலாளர் அதனை விதித்துரைக்கப்பட்ட அலுவலருக்கு அல்லது இயைபான இடப்பரப்பிலுள்ள பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு உடனடியாக அறிவித்தலும் வேண்டும்.

13. (1) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட உரிமமொன்று இல்லாதாக்கப்பட்டுள்ளவிடத்து அத்தகைய யானையின் சொந்தக்காரராகவிருப்பதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய, உரிமமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காகப் பொருளளவில் இதற்கான அட்டவணை II இல் தரப்பட்டுள்ள படிவத்தில் விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் யானையின் புதிய சொந்தக்காரராக இருப்பதற்குத் தகவுடையவரென விதித்துரைக்கப்பட்ட அலுவலர் அபிப்பிராயப்படுமிடத்து, அவர் அத்தகைய விண்ணப்பகாரருக்குப் புதிய உரிமமொன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன் யானை தொடர்பிலான எல்லாத் தரவுகளையும் உள்ளடக்குகின்ற அட்டையொன்றை ஒழுங்குவிதி 7(2) இல் குறித்துரைக்கப்பட்டவாறு நவீன தொழில்நுட்பவியலைப் பயன்படுத்தி வழங்குதலும் வேண்டும்.

14. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பமொன்றில் பொய்யான தகவல்களை வழங்குகின்ற ஆளொருவர் கட்டளைச் சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார்.

15. உரிமக்கட்டணமாக அல்லது உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான கட்டணமாக இவ்வொழுங்குவிதிகளின்கீழ் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

16. ஒரு யானையைச் சொந்தமாக வைத்திருக்கின்ற அல்லது கட்டுக்காப்பில் கொண்டுள்ள ஆள் ஒவ்வொருவரும் இதற்கான அட்டவணை VI இல் கொடுக்கப்பட்ட இயைபான படிவத்தில் அந்த யானை தொடர்பிலான பின்வரும் பதிவேடுகளைப் பேணுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பதிவேடுகள் கோரப்படும்போது சோதனைக்காக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்கும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலர் முன்னரும் ஆறு மாதங்களுக்கொரு தடவை காண்பிக்கப்படுதலும் வேண்டும். விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் பின்வரும் பதிவேடுகளை உட்படுத்தி ஒரு தரவுப் பதிவேட்டுப் புத்தகத்தைப் வழங்குவதற்கு அதிகாரம் கொண்டுள்ளது:-

(அ) தரவுத்தாள்;

(ஆ) சிகிச்சை வரலாற்றுத்தாள்;

(இ) தடுப்புமருந்தேற்றல் பற்றிய தாள்.

## பாகம் III

### வரலாற்றுமுறையான கலாசார ஊர்வலங்களுக்காகப் பழக்கியெடுக்கப்பட்ட யானைகளைப் பெற்றுக்கொள்ளுதல்

17. (1) ஒரு வரலாற்றுமுறையான கலாசார ஊர்வலமொன்றை ஒழுங்குபடுத்துகின்ற ஒரு தேவாலயத்துக்கு அல்லது ஒரு கோயிலுக்குப் பழக்கியெடுக்கப்பட்ட யானையொன்றைப் பெற்றுக்கொள்வது தேவையாகவுள்ளவிடத்து, விடயத்துக்கேற்ப, அத்தகைய தேவாலயத்தின் அல்லது கோயிலின் நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது விகாராதிபதி அட்டவணை VII இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பழக்கியெடுக்கப்பட்ட யானைகளின் சொந்தக்காரர்களினது ஒழுங்கமைப்புக்கு அதற்கென விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒழுங்கமைப்பினால் அது புறக்குறிப்பிடப்பட்டு விதப்புரைக்காகப் பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

(2) பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதியினால் விதந்துரைக்கப்பட்ட விண்ணப்பம், அங்கீகாரத்துக்காகப் புத்தசாசனம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய அங்கீகாரத்தின்மேல், புத்த சாசனம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், அத்தகைய அங்கீகாரத்தைச் செயலாளருக்கு அனுப்புதல் வேண்டுமென்பதுடன், செயலாளர் அதன்மேல், விடயத்துக்கேற்ப, பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது தேசிய விலங்கினப் பூங்காத் திணைக்களத்தின் பணிப்பாளர்

தலைமையதிபதியின் கட்டுக்காப்பிலுள்ள ஏதேனும் பழக்கியெடுக்கப்பட்ட யானை அத்தகைய நோக்கத்துக்காக முறையாக விடுவிக்கப்படுதல் வேண்டுமெனப் பணிப்பாளர் தலைமையதிபதியை அல்லது தேசிய விலங்கினப் பூங்காத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியைப் பணித்தலும் வேண்டும்.

(4) பழக்கியெடுக்கப்பட்ட யானையொன்று இவ்வொழுங்குவிதியின்கீழ் விடுவிக்கப்படும்போது, விடயத்துக்கேற்ப, பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது தேசிய விலங்கினப் பூங்காத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி, விபரமானவோர் ஆவணத்தைப் பேணுதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின்கீழ் பழக்கியெடுக்கப்பட்டவொரு யானையைப் பெற்றுக்கொள்கின்ற விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் இவ்வொழுங்குவிதிகளிற் குறித்துரைக்கப்பட்டவாறான நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

18. சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய –

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"யானை" என்பது, (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"கட்டளைச் சட்டம்" என்பது, (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் என்று பொருளாகும்;

"யானையின் சொந்தக்காரர்" என்பது, ஒரு யானையை வாங்கி அத்தகைய யானையைத் தனதுடைமையில் வைத்திருக்கின்ற ஆள் என்று பொருளாகும்;

"ஒரு யானையின் கட்டுக்காப்பைக் கொண்டுள்ள ஆள்" என்பது, யானையைப் பராமரிப்பதற்குச் சட்டப்படியான சொத்தாண்மையை மட்டுமே கொண்டுள்ள ஆள் என்று பொருளாகும்;

"நம்பிக்கைப் பொறுப்பாளர்" என்பது, (318 ஆம் அத்தியாயமான) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தில் அத்தகைய பதத்துக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"விலங்கு மருத்துவர்" என்பது, 1966 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் விலங்கு மருத்துவத் தொழிலர்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு விலங்கு மருத்துவர் என்று பொருளாகும்;

"விகாராதிபதி" என்பது, (318 ஆம் அத்தியாயமான) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தில் அத்தகைய பதத்துக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

"வனசீவராசிகள் பேணிக்காத்தல் நிதியம்" என்பது, கட்டளைச்சட்டத்தின் 65 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட வனசீவராசிகள் பேணிக்காத்தல் நிதியம் என்று பொருளாகும்.

19. ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டு மே 14 ஆந் திகதிய 662/4 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1991 ஆம் ஆண்டின் கொம்பன் யானைகள் மற்றும் யானைகளைப் பதிவு செய்தலும் அவற்றுக்கு உரிமமளித்தலும் ஒழுங்குவிதிகள், அவற்றின்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் ஒழிக்கப்படுகின்றன.


**அட்டவணை I**

பாகன்மாரினால் பயன்படுத்தப்படும் பாரம்பரிய கருவிகளின் நியமும் அளவுக் குறிப்பீடுகளும்

"அங்குசத்தின்" நியமங்களும் அளவுக்குறிப்பீடுகளும்


(ஒழுங்குவிதி 2 (த)

**அங்குசம்**




"கத்தியின்" நியமங்களும் அளவுக்குறிப்பீடுகளும்

**கத்தி**



"பிரம்பின்" நியமங்களும் அளவுக்குறிப்பீடுகளும்

**பிரம்பு**



## அட்டவணை II

[ஒழுங்குவிதி 5(1)]

### பழக்கியெடுக்கப்பட்டவொரு யானையைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பகாரரின் விபரங்கள்

   (i) விண்ணப்பகாரரின் முழுப்பெயர்:
   (ii) முதலெழுத்துக்களுடன் விண்ணப்பகாரரின் பெயர்:
   (iii) முகவரி:
   (iv) தே.அ.அ.இலக்கம்:
   (v) தொலைபேசி இலக்கம்: செல்லிட : நிலையான :
   (vi) மின்னஞ்சல்:

2. எந்த யானைகளுக்காக விண்ணப்பிக்கப்படுகின்றதோ அந்த யானைகளின் விபரங்கள்

   (i) யானை வைத்திருக்கப்படும் இடத்தின் முகவரி :

      (அ) மாகாணம்:
      (ஆ) மாவட்டம்:
      (இ) பிரதேச செயலகப் பிரிவு:
      (ஈ) கிராம அலுவலர் பிரிவு:

   (ii) அது ஒரு யானையா/கொம்பன் யானையா/பெண் யானையா என்பது:

   (iii) எந்த யானைக்காக விண்ணப்பிக்கப்பட்டதோ அந்த யானையின் வயது:

   (iv) யானையைப் பெற்றுக்கொள்ளும் கோயிலின் மதப்பிரிவு:

   (v) யானைக்காக விண்ணப்பிக்கும் கோயிலினால்/தேவாலயத்தினால்/வேறு வெளியாட்களினால் வருடாந்தம் நடாத்தப்படும் ஊர்வலமும் கலாசார அலுவல்களும் பற்றிய விபரமான அறிக்கை (இது பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதியினால் எண்பிக்கப்படுதல் வேண்டும்):

   (vi) விண்ணப்பதாரர் வேறு யானைகளைச் சொந்தமாக வைத்திருந்தாரா/வைத்திருக்கின்றாரா?

      அ. ஆம் எனில், யானைகளின் எண்ணிக்கை:
      ஆ. அத்தகைய யானைகளின் பதிவிலக்கங்கள் பற்றிய விபரங்கள்:
      இ. அத்தகைய யானைகள் எந்த ஊர்வலத்திலும் கலாசாரச் செயற்பாடுகளிலும் பயன்படுத்தப்படுகின்றனவோ அந்த ஊர்வலத்தினதும் கலாசாரச் செயற்பாடுகளினதும் விபரங்கள்:
      ஈ. விண்ணப்பதாரர் யானைகளைப் பெற்றுக்கொண்டுள்ள வழி:
      உ. உடைமையிலுள்ள அத்தகைய யானை இறந்திருப்பின், அத்தகைய இறப்பு இயற்கையான இறப்பா அல்லது வேறெதுவுமா என்பது:
      ஊ. உடைமையிலுள்ள ஒரு யானையின்/ யானைகளின் கைமாற்றமொன்றிருப்பின் அத்தகைய கைமாற்றத்துக்கான காரணங்கள்.

3. விண்ணப்பதாரரின் கொள்ளளவு பற்றிய விபரங்கள்

   (i) யானையைப் பராமரிப்பதற்கு விண்ணப்பதாரரின் பொருளாதார இயல்திறன் (வங்கி அறிக்கைகள், ஏதேனும் ஆதனம்/ காணிகள் உட்பட, தோற்றுவிக்கப்பட்ட எல்லா வருமானத்தினதும் விபரங்களும் அண்மைய 03 ஆண்டுகளுக்கான இயைபான அறிக்கைகளின் / விபரங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளும்):

   (ii) யானைக்கு உணவுபெறுகின்ற வழி:

(iii) யானைக்கு நீர் பெறுகின்ற (குடிப்பதற்கும் குளிப்பதற்கும்) வழி:

(iv) அத்தகைய யானை மதங்கொண்டுள்ளநிலையில் இருக்கும்போது யானையானது வைத்திருக்கப்படும் வழி:

(v) அவசியமான சிகிச்சைகளைப் பெறுகின்ற வழி:

(vi) யானைக்கு இடம்பெயர்த்தல் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழி:

4. பாகன்மார் பற்றிய விபரங்கள்

(i) முதலெழுத்துக்களுடன் பாகனின் பெயர்:
(ii) முகவரி:
(iii) தே.அ.அ.இலக்கம்:
(iv) அனுபவம்:
(v) பெறப்பட்ட அளிப்புகள்/சான்றிதழ்கள்:
(vi) மருத்துவச் சான்றிதழ்கள் முதலியன:

5. தொழில்நுட்பத் தேவைப்பாடுகள்

i. யானையின்மீது செய்யப்பட்ட மரபணு பரீட்சிப்புப் பற்றிய அறிக்கையின் விபரங்கள்:

ii. நுண்சில்லுகளின் இலக்கம்:
(நுண்சில்லுகள் தொடர்பாக விலங்கு மருத்துவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழொன்று இணைக்கப் படுதல் வேண்டும்.)

6. பதிவுக் கட்டணத்தின் கொடுப்பனவுக்கான பற்றுச்சீட்டின் இலக்கம்:

7. மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் என்றும் ஒரு யானையைப் பெற்றுக்கொள்வதற்கு நான் தெரிவு செய்யப்படின், யானையின் நல்வாழ்வையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு உடன்படிக்கையின் நியதிகளின்படி யானையைப் பராமரிப்பதற்கு எனக்கு இயல்திறன் உண்டு என்றும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

………………………..
திகதி

………………………………………………
விண்ணப்பதாரரின் கையொப்பம்

8. ஏனைய விதப்புரைகள்

i. பழக்கியெடுக்கப்பட்ட யானைகளின் சொந்தக்காரர்களினது ஒழுங்கமைப்பின் விதப்புரை:

ஒரு யானையைப் பராமரிப்பதற்கான தகைமைகள் நிறைவேற்றப்படுகின்றனவென நான் விதந்துரைக்கின்றேன்/ விதந்துரைக்கவில்லை.

……………………………………………………
தவிசாளரின் / செயலாளரின் கையொப்பம்.
(அலுவலகமுறையான இலச்சினை)

ii. புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் / பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதியின் விதப்புரைகள் :

ஒரு யானையைப் பராமரிப்பதற்கான தகைமைகள் நிறைவேற்றப்படுகின்றனவென நான் விதந்துரைக்கின்றேன்/ விதந்துரைக்கவில்லை.

……………………………………………………
புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுச் செயலாளரின்/
பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதியின் கையொப்பம்.
(அலுவலகமுறையான இலச்சினை)

## அட்டவணை III

[ஒழுங்குவிதி 5(2)]

### தற்போது ஒரு சொந்தக்காரரின் கட்டுக்காப்பிலுள்ள பதிவு செய்யப்படாத யானையொன்றின் பதிவுக்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரரின் விபரங்கள்-

   i. விண்ணப்பதாரரின் முழுப்பெயர்:

   ii. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரரின் பெயர்:

   iii. முகவரி:

   iv. தே.அ.அ.இலக்கம்:

   v. தொலைபேசி இலக்கம்: செல்லிட : நிலையான :

   vi. மின்னஞ்சல் முகவரி:

2. எந்த யானைகளுக்காக விண்ணப்பிக்கப்படுகின்றதோ அந்த யானைகளின் விபரங்கள்-

   i. யானை வைத்திருக்கப்படும் இடத்தின் முகவரி:

      (அ) மாகாணம்:

      (ஆ) மாவட்டம்:

      (இ) பிரதேச செயலகப் பிரிவு:

      (ஈ) கிராம அலுவலர் பிரிவு:

   ii. யானையின் தன்மை (தந்தங்களுடன்/தந்தங்களில்லாமல்):

   iii. தந்தங்களுடனாயின், தந்தத்தின் நீளம் : இடது தந்தம் ............... அடி ............ அங்குலம்
   வலது தந்தம் ............. அடி ............ அங்குலம்

   iv. தோள்வரையிலான உயரம் :............. அடி ............ அங்குலம்

   v. பால் (ஆண்/பெண்):

   vi. வயது:

   vii. முன்பாதத்தின் விட்டம்: ............. அங்குலம்

   viii. அளவீடு பெற்றுக்கொள்ளப்பட்ட திகதி:

   ix. அடையாளங்காணலின் விசேட பண்புகள்: (தோலின் நிறத்திலான வித்தியாசமும் கட்டிவைத்ததன் மூலம் ஏற்பட்டவையும் முன் மற்றும் பின்கால்களில் காணப்பட்டவையுமான தழும்புகளின் அடையாளங்களும்)

   x. வேறெவையேனும் வேறுபிரித்துக்காட்டும் சிறப்புக்கூறுகள் அல்லது சிறப்புக்கூறுகளின் பிறழமைவு:

   xi. நிழற்படங்கள் :

யானையின் பக்கத்தோற்றம்
(இடது) (3"X4")

யானையின் பக்கத்தோற்றம்
(வலது) (3"X4")

தலையையும் தும்பிக்கையையும் காட்டுகின்ற யானையின் முன்தோற்றம் (3"x4")

பிற்புறப்பகுதியையும் வாலையும் காட்டுகின்ற யானையின் பின்தோற்றம் (3"x4")

xii. சொந்தக்காரரினால் யானை கொள்ளப்படுகின்ற/பெற்றுக்கொள்ளப்படுகின்ற வழி:

xiii. கொள்வனவு செய்யப்பட்டிருப்பின், விலையும் எவரிடமிருந்தும்:

xiv. அது ஒரு கோயிலாகவிருப்பின், கோயில் எந்த மதப்பிரிவுக்குச் சொந்தமானது:

xv. கோயிலினால்/தேவாலயத்தினால்/வேறு வெளியாட்களினால் நடாத்தப்பட்ட வருடாந்த ஊர்வலங்களும் கலாசாரச் செயற்பாடுகளும் பற்றிய விபரமான அறிக்கை பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதியினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்:..........................

xvi. விண்ணப்பதாரருக்கு வேறெவையேனும் யானைகள் உண்டா?

(அ) அவ்வாறாயின், யானைகளின் எண்ணிக்கை:

(ஆ) அத்தகைய யானைகளின் பதிவிலக்கங்கள் பற்றிய விபரங்கள்:

(இ) அத்தகைய யானைகள் எந்த ஊர்வலத்திலும் கலாசாரச் செயற்பாடுகளிலும் பயன்படுத்தப்படு கின்றனவோ அந்த ஊர்வலத்தினதும் கலாசாரச் செயற்பாடுகளினதும் விபரங்கள்:

(ஈ) விண்ணப்பதாரர் யானைகளைப் பெற்றுக்கொண்டுள்ள வழி:

(உ) உடைமையிலுள்ள அத்தகைய யானை இறந்திருப்பின், அத்தகைய இறப்பு இயற்கையான இறப்பா அல்லது வேறெதுவுமா என்பது:

(ஊ) உடைமையிலுள்ள ஒரு யானையின் / யானைகளின் கைமாற்றமொன்றிருப்பின் அத்தகைய கைமாற்றத்துக்கான காரணங்கள்:

3. விண்ணப்பதாரரின் கொள்ளளவு பற்றிய விபரங்கள்-

(i) யானையைப் பராமரிப்பதற்கு விண்ணப்பதாரரின் பொருளாதார இயல்திறன் (வங்கி அறிக்கைகள், ஏதேனும் ஆதனம்/ காணிகள் உட்பட, தோற்றுவிக்கப்பட்ட எல்லா வருமானத்தினதும் விபரங்களும் அண்மைய 03 ஆண்டுகளுக்கான இயைபான அறிக்கைகளின் / விபரங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளும்):

(ii) யானைக்கு உணவுபெறுகின்ற வழி:

(iii) யானைக்கு நீர்பெறுகின்ற (குடிப்பதற்கும் குளிப்பதற்கும்) வழி:

(iv) அத்தகைய யானை மதங்கொண்டுள்ளநிலையில் இருக்கும்போது யானையானது வைத்திருக்கப்படும் வழி:

(v) அவசியமான சிகிச்சைகளைப் பெறுகின்ற வழி:

(vi) யானைக்கு இடம்பெயர்த்தல் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழி:

4. பாகன்மார் பற்றிய விபரங்கள்-

(i) முதலெழுத்துக்களுடன் பாகனின் பெயர்:

(ii) முகவரி:

(iii) தே.அ.அ.இலக்கம்:

(iv) அனுபவம்:

(v) பெறப்பட்ட அளிப்புகள்/சான்றிதழ்கள்:

(vi) மருத்துவச் சான்றிதழ்கள் முதலியன:

5. யானையின்மீது செய்யப்பட்ட மரபணு பரீட்சிப்புப் பற்றிய அறிக்கையின் விபரங்கள்:

6. நுண்சில்லுகளின் இலக்கம்:
(நுண்சில்லுகள் தொடர்பாக விலங்கு மருத்துவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழொன்று இணைக்கப்படுதல் வேண்டும்.)

7. பதிவுக் கட்டணத்தின் கொடுப்பனவுக்கான பற்றுச்சீட்டின் இலக்கம்:

8. மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் என்றும் ஒரு யானையைப் பெற்றுக்கொள்வதற்கு நான் தெரிவு செய்யப்படின், யானையின் நல்வாழ்வையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு உடன்படிக்கையின் நியதிகளின்படி யானையைப் பராமரிப்பதற்கு எனக்கு இயல்திறன் உண்டு என்றும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

.............................. ......................................................

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

9. ஏனைய விதப்புரைகள்

i. பழக்கியெடுக்கப்பட்ட யானைகளின் சொந்தக்காரர்களினது ஒழுங்கமைப்பின் விதப்புரை:

ஒரு யானையைப் பராமரிப்பதற்கான தகைமைகள் நிறைவேற்றப்படுகின்றனவென நான் விதந்துரைக்கின்றேன்/ விதந்துரைக்கவில்லை.

..............................................................

தவிசாளரின் / செயலாளரின் கையொப்பம்.
(அலுவலகமுறையான இலச்சினை)

ii. புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் / பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதியின் விதப்புரைகள் :

ஒரு யானையைப் பராமரிப்பதற்கான தகைமைகள் நிறைவேற்றப்படுகின்றனவென நான் விதந்துரைக்கின்றேன்/ விதந்துரைக்கவில்லை.

..............................................................

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுச்
செயலாளரின்/பௌத்த அலுவல்கள் ஆணையாளர்
தலைமையதிபதியின் கையொப்பம்.
(அலுவலகமுறையான இலச்சினை)

## அட்டவணை IV

[ஒழுங்குவிதி 7(1)]

### பழக்கியெடுக்கப்பட்ட ஒரு யானையைப் பதிவு செய்வதற்கும் தடுத்து வைப்பதற்குமான உரிமப் படிவம்

1. நிழற்படங்கள்

யானையின் பக்கத்தோற்றம் (இடது) (3"X4")

யானையின் பக்கத்தோற்றம் (வலது) (3"X4")

யானையின் தலையினதும் தும்பிக்கையினதும் முன்தோற்றம் (3"X4")

யானையின் வாலுடன் அதன் பிற்புறத்தோற்றம் (3"X4")

2. யானையின் பெயர் (ஏதேனுமிருப்பின்):
3. பதிவிலக்கம்:
4. சொந்தக்காரரின் விபரங்கள்:

   i. முழுப்பெயர்:
   ii. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரரின் பெயர்:
   iii. முகவரி:
   iv. தே.அ.அ.இலக்கம்:
   v. தொலைபேசி இலக்கம்: செல்லிட : நிலையான :
   vi. மின்னஞ்சல் முகவரி:

5. பாதுகாவலரின் விபரங்கள்:

   i. முழுப்பெயர்:
   ii. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரரின் பெயர்:
   iii. முகவரி:
   iv. தே.அ.அ.இலக்கம்:
   v. தொலைபேசி இலக்கம்: செல்லிட : நிலையான :
   vi. மின்னஞ்சல் முகவரி:

6. யானையின் தன்மை (தந்தங்களுடன்/தந்தங்களில்லாமல்):
7. தந்தங்களுடனாயின், தந்தத்தின் நீளம்: இடது தந்தம் :................ அடி :................ அங்குலம்
   வலது தந்தம் :................ அடி :................ அங்குலம்

8. தோள்வரையிலான உயரம் :................ அடி :................ அங்குலம்

9. ஆணா/பெண்ணா என்பது:

10. பதிவுத் திகதியன்றுள்ளவாறான வயது:

11. முன்பாதத்தின் விட்டம் :................ அங்குலம்

12. அளவீடு பெற்றுக்கொள்ளப்பட்ட திகதி:

13. அடையாளங்காணலின் நிரந்தரமான குறிகள்:

14. வேறெவையேனும் முக்கியமான சிறப்புக்கூறுகள் அல்லது உடற்பாகத்தின் குறைபாடு:

15. யானை வைத்திருக்கப்படுகின்ற இடத்தின் முகவரியும் நிருவாக மாவட்டமும்:

16. நுண்சில்லுகளின் இலக்கம்:

17. தரவு அட்டையின் இலக்கம்:

……………………….. ………………………………………………

திகதி உரிமம் வழங்கும் அலுவலரின் கையொப்பம்.

(அலுவலகமுறையான இலச்சினை)

## அட்டவணை V

[ஒழுங்குவிதி 11(4)]

### வருடாந்த உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான படிவம்

1. நிழற்படங்கள்

யானையின் பக்கத்தோற்றம் (இடது) (3"X4")

யானையின் பக்கத்தோற்றம் (வலது) (3"X4")

யானையின் தலையினதும் தும்பிக்கையினதும் முன்தோற்றம் (3"X4")

யானையின் வாலுடன் அதன் பிற்புறத்தோற்றம் (3"X4")

2. பதிவுத் திகதியும் இலக்கமும்:
3. யானையின் பெயர்:
4. சொந்தக்காரரின் விபரங்கள்:

   i. முழுப்பெயர்:
   ii. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரரின் பெயர்:
   iii. முகவரி:
   iv. தே.அ.அ.இலக்கம்:
   v. தொலைபேசி இலக்கம்: செல்லிட : நிலையான :
   vi. மின்னஞ்சல் முகவரி:

5. பாதுகாவலரின் விபரங்கள்:

   i. முழுப்பெயர்:
   ii. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரரின் பெயர்:
   iii. முகவரி:

iv. தே.அ.அ.இலக்கம்:

v. தொலைபேசி இலக்கம்: செல்லிட நிலையான

vi. மின்னஞ்சல் முகவரி:

6. யானையின் தன்மை (தந்தங்களுடன்/தந்தங்களில்லாமல்):

7. தந்தங்களுடனாயின், தந்தத்தின் நீளம்: இடது தந்தம் .............. அடி ........... அங்குலம்
வலது தந்தம் ……..…..…. அடி ……...…. அங்குலம்

8. தோள்வரையிலான உயரம் ………….. அடி …………. அங்குலம்

9. ஆணா/பெண்ணா என்பது:

10. பதிவுத் திகதியன்றுள்ளவாறான வயது:

11. முன்பாதத்தின் விட்டம்: ………….. அங்குலம்

12. அளவீடு பெற்றுக்கொள்ளப்பட்ட திகதி:

13. அடையாளங்காணலின் நிரந்தரமான குறிகள்:

14. வேறெவையேனும் முக்கியமான சிறப்புக்கூறுகள் அல்லது உடற்பாகத்தின் குறைபாடு:

15. யானை வைத்திருக்கப்படுகின்ற இடத்தின் முகவரியும் நிருவாக மாவட்டமும்:

16. நுண்சில்லுகளின் இலக்கம்:

17. வருடாந்த உரிமத்தின் புதுப்பித்தற் கட்டணத்தின் பற்றுச்சீட்டிலக்கம்:

18. ஏனையவை:

……………………….. ………………………………………………

திகதி விண்ணப்பகாரரின் கையொப்பம்.

## அட்டவணை VI

[ஒழுங்குவிதி 16]

### தரவுப் பதிவேட்டுப் புத்தகம்

*(அ)* *தரவுத்தாள்*

*1. நிழற்படங்கள்*

யானையின் பக்கத்தோற்றம்
(இடது) (3"X4")

யானையின் பக்கத்தோற்றம்
(வலது) (3"X4")

யானையின் தலையினதும்
தும்பிக்கையினதும் முன்தோற்றம்
(3"X4")

யானையின் வாலுடன் அதன்
பிற்புறத்தோற்றம் (3"X4")

*2. சொந்தக்காரரின் விபரங்கள்:*

(i) சொந்தக்காரரின் பெயர்:
(ii) முகவரி:
(iii) தே.அ.அ.இலக்கம்:
(iv) தொலைபேசி இலக்கம்: செல்லிட : நிலையான :
(v) மின்னஞ்சல் முகவரி:
(vi) யானையைக் கொள்ளுகின்ற/பெற்றுக்கொள்கின்ற வழி:
(vii) கொள்வனவு செய்யப்பட்டிருப்பின், விலையும் எவரிடமிருந்தும்:

*3. யானையின் விபரங்கள்*

(i) பதிவிலக்கமும் திகதியும்:
(ii) யானையின் பெயர்:
(iii) நுண்சில்லுகளின் இலக்கம்:

(iv) தந்தத்தின் நீளம்:

(v) வயது (விலங்கு மருத்துவரிடமிருந்தான சான்றிதழொன்று இணைக்கப்படுதல் வேண்டும்):

(vi) கிடைக்கக்கூடியதாயின், அத்தகைய யானையின் தாய் யானையின் பதிவிலக்கம்:

மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

| ……………………….. | ………………………………………………… |
|---|---|
| திகதி | யானையின் சொந்தக்காரரினதும் பாதுகாவலரினதும் கையொப்பங்கள். |

ஆ. சிகிச்சை அட்டை

| தொடரிலக்கம் | திகதி | நோய் | விதந்துரைக்கப்பட்ட சிகிச்சையும் சிகிச்சையின் தன்மையும் | சிகிச்சையளித்த மருத்துவரின் பெயரும் கையொப்பமும் |
|---|---|---|---|---|
| | | | | |

இ. தடுப்புமருந்தேற்றல் அட்டை

| தொடரிலக்கம் | திகதி | வயது | தடுப்புமருந்து | விலங்கு மருத்துவரின் பெயர் | விலங்கு மருத்துவரின் கையொப்பம் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## அட்டவணை VII

[ஒழுங்குவிதி 17(1)]

**ஒரு வரலாற்றுமுறையான கலாசார ஊர்வலத்துக்காக யானைகளைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரரின் விபரங்கள்

   i. விண்ணப்பகாரரின் முழுப்பெயர்:
   ii. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரரின் பெயர்:
   iii. முகவரி:
   iv. தே.அ.அ.இலக்கம்:
   v. தொலைபேசி இலக்கம்: செல்லிட : நிலையான :
   vi. மின்னஞ்சல்:

2. கோயிலின்/தேவாலயத்தின் விபரங்கள்-

   i. கோயிலின்/தேவாலயத்தின் பெயர்:
   ii. பாதுகாவலரின் பெயர்:
   iii. பதிவில:
   iv. முகவரி:

      (அ) மாகாணம்-
      (ஆ) மாவட்டம்-
      (இ) பிரதேச செயலாளர் பிரிவு-
      (ஈ) கிராம அலுவலர் பிரிவு-

3. கோயிலினால்/தேவாலயத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் ஊர்வலத்தினதும் கலாசார அலுவல்களினதும் விபரமான அறிக்கை

   i. வரலாற்றுமுறையான கலாசார ஊர்வலத்தின் பெயர்:
   ii. விபரங்கள்:

      (அ) ஊர்வலம் நடாத்தப்படவேண்டிய இடம்:
      (ஆ) ஊர்வலத்தின் மார்க்கம்:
      (இ) ஊர்வலத்தின் காலப்பகுதி:
      (ஈ) தேவைப்பட்ட காலப்பகுதி:
      ஆரம்பிக்கும் திகதி: நேரம்:
      முடியும் திகதி: நேரம்:
      நாட்களின் எண்ணிக்கை:

   iii. கோரப்பட்ட யானைகளின் எண்ணிக்கை:

4. பாதுகாவலருக்கு/கோயிலுக்கு/தேவாலயத்துக்கு வேறெவையேனும் யானைகள் உண்டா? ஆம்/இல்லை

   (அ) ஆம் எனில், யானைகளின் எண்ணிக்கை :
   (ஆ) அத்தகைய யானைகளின் பதிவிலக்கங்கள் :
   (இ) பதிவு செய்யப்படாதிருப்பின், காரணங்கள் :

5. யானை வைத்திருக்கப்படும் இடத்தின் முகவரியும் நிருவாக மாவட்டமும்:

6. பாதுகாவலரின்/கோயிலின்/தேவாலயத்தின் கொள்ளளவு பற்றிய விபரங்கள்

i. யானைக்குக் குறித்தொதுக்கப்பட்ட இடம்:

ii. யானையை வைத்திருப்பதற்கான புகலிடத்தின் அளவு:

iii. யானையைப் பராமரிப்பதற்குக் கோயிலின்/தேவாலயத்தின் பாதுகாவலரின் பொருளாதார இயல்திறன்: (வங்கி அறிக்கைகள், ஏதேனும் ஆதனம்/காணி உட்பட எல்லா வருமானத் தோற்றுவிப்புகளினதும் விபரங்கள் மற்றும் அண்மைய 03 ஆண்டுகளுக்கான இயைபான அறிக்கைகளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள்)

iv. யானைக்கு உணவுபெறும் வழி:

v. யானைக்கு நீர் பெறும் வழி (குடிப்பதற்கும் குளிப்பதற்கும்):

vi. யானைக்கு இடம்பெயர்த்தல் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழி:

vii. அத்தகைய யானை மதங்கொண்டுள்ளபோது யானை வைத்திருக்கப்படும் வழி:

viii. அவசியமான சிகிச்சைகளைப் பெறுகின்ற வழி:

ix. விலங்கு மருத்துவரின் விபரங்கள் (ஒரு யானையைப் பராமரிப்பதற்கு):

(அ) பெயர்:
(ஆ) தே.அ.அ.இலக்கம்:
(இ) முகவரி:
(ஈ) தொடர்பு விபரங்கள்: செல்லிட- நிலையான- மின்னஞ்சல்-
(உ) பதிவிலக்கம்:

7. பாகன்மார்களின் விபரங்கள்

i. முதலெழுத்துக்களுடன் பாகனின் பெயர்:
ii. முகவரி:
iii. தே.அ.அ.இலக்கம்:
iv. அனுபவம்:
v. பெறப்பட்ட அளிப்புக்கள்/சான்றிதழ்கள்:
vi. மருத்துவச் சான்றிதழ்கள் முதலியன:

8. மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென்றும் ஒரு யானையைப் பெற்றுக்கொள்வதற்கு நான் தெரிவு செய்யப்படின், யானையின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான உடன்படிக்கையின் நியதிகளின்படி யானையைப் பராமரிப்பதற்கான இயல்திறன் எனக்கு உண்டென்றும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

…………………..
திகதி

………………………………………………..
கோயிலின்/தேவாலயத்தின் பாதுகாவலரினது கையொப்பம்.
(அலுவலகமுறையான இலச்சினை)

9. புறக்குறிப்பு, விதப்புரைகள் மற்றும் அங்கீகாரங்கள்

ஒரு யானையைப் பராமரிப்பதற்கும் வரலாற்றுமுறையான கலாசார ஊர்வலத்துக்காக அதனை விடுவிப்பதற்குமான தகைமைகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவென நான் புறக்குறிப்பிடுகின்றேன்.

……………………………………….
பழக்கியெடுக்கப்பட்ட யானைகளின் ஒழுங்கமைப்பினது
தவிசாளரின் / செயலாளரின் கையொப்பம்.
(அலுவலகமுறையான இலச்சினை)

ஒரு யானையைப் பராமரிப்பதற்கும் வரலாற்றுமுறையான கலாசார ஊர்வலத்துக்காக அதனை விடுவிப்பதற்குமான தகைமைகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவென நான் விதந்துரைக்கின்றேன்.

........................................................
புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின்
ஆணையாளர் தலைமையதிபதியின் / பௌத்த அலுவல்கள்
ஆணையாளர் தலைமையதிபதியின் கையொப்பம்.
(அலுவலமுறையான இலச்சினை)

ஒரு யானையைப் பராமரிப்பதற்கும் வரலாற்றுமுறையான கலாசார ஊர்வலத்துக்காக அதனை விடுவிப்பதற்குமான தகைமைகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவென நான் அங்கீகரிக்கின்றேன் / அங்கீகரிக்கவில்லை.

........................................................
புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுச்
செயலாளரின் / பௌத்த அலுவல்கள் ஆணையாளர்
தலைமையதிபதியின் கையொப்பம்.
(அலுவலமுறையான இலச்சினை)

ஒரு யானையைப் பராமரிப்பதற்கும் வரலாற்றுமுறையான கலாசார ஊர்வலத்துக்காக அதனை விடுவிப்பதற்குமான தகைமைகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவென நான் விதந்துரைக்கின்றேன் / விதந்துரைக்கவில்லை.

........................................................
செயலாளரின் கையொப்பம்.
(அலுவலக முறையான இலச்சினை)

வரலாற்றுமுறையான கலாசார ஊர்வலத்துக்காக நான் ஒரு யானையை விடுவிக்கின்றேன்.

....................................................
பணிப்பாளர் தலைமையதிபதி
வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் /
தேசிய விலங்கினப் பூங்காத் திணைக்களம்
(அலவலகமுறையான இலச்சினை)

09-49

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.